# இந்துசாதனம்

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஒு 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: | ,, ரூ. | 8 00 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ | 9-00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-00 |
| ,, | அரைக்கலம் | ரூ. 4-50 |
| ,, | கால்கலம் | ரூ 3-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பணம் அனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சo. } யாழ்ப்பாணம்:—விபவஞு ஆவணிமீ கநிஉ, (1928 ஆகஸ்ட் 30) வியாழக்கிழமை. { இலக்கம்—கஅ


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேது
மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறுர்கள். இதைநான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலசஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாளு, சாலாமூஸ்லி, சப்பேமூத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முன்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் கீரிழிவு, கீர்க்கடுப்பு, கீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் கோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உo. அரைருத்தலுக்கு ரூபா கo. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாசிமாச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) **மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.**

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதுவோர் அறிவு பயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) **மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.**

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.
—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3, **கொலைமறுத்தல் பிரசினேத்தரம்.**
—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான இடங்கள்.

(1) சி. ச. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) P. P. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

## இலங்கை ஆயுள்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்பொண்டன்கோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்ளோமா என்னும் அங்கீகாரப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

## யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

## சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அநேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் துரிதஸ்கலிதமென்னும் ஓர்வித ரோகினுல் கேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினுல் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்த வாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனுேற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுக்களுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினுலும பலஈனத்தினுலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தாகந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ருத்தல் மருந்து ரூபா | 10 | 00 | } | வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ ,, ,, ,, | 5 | 00 | | |
| ¼ ,, ,, ,, | 3 | 50 | | |

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வாச, டக்டர் எம் என். பிள்ளை ஏ. எம். ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயார்செய்யப்பட்டது மேலும் எங்களிடம அநேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினுல் எங்களால் தீர்க்க முடியுமானுல் அதற்குத்தகுந்த மருந்தை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது நிராதரோகமாயிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொடுவாய்ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts. முத்திரையும் அனுப்பினுல் விபரமாகப் பதிலெழுதப்படும்.

(Q. 104)

## கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா2 அணு 8.
2. பகவற்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
(H 64) சுன்னுகம், யாழ்ப்பாணம்.

## இன்னும் முதன்மை ஸ்தானமே!

கோவுத் தைலங்களென்று சொல்லி "டஜன்" கணக்காய்க் கேள்விப்படுகிறீர்கள். ஆனுல் கோவைத் திரபதிற சிறந்தது என்று சொல்லக் கூடியது

## லிட்டில்ஸ் ஓரியென்டல்பாம்



தைலம்தான்.

43-வருடங்களாய் உண்மையான அனுபோகத்தில் உசிதமாய் நின்று தலைவலி, நரம்புவலி, கீல்வாய்வு, தடைப்பிடிப்பு, வாதம், சுளுக்கு. தொண்டைநோ, நெஞ்சுச்சளி முதலியவைகளுக்கு
நிச்சயமான
சுறுக்கான
தீங்கில்லாத
தைலம்
என்று ருசிக்கப்பெற்றது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

Little's Oriental Balm and Pharmaceuticals Ltd., Madras.

(4—28

(Y. 51.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு ஆவணிமீ" உ௰உ வியாழக்கிழமை.

## கேம்பிறிஜ் சர்வகலாசங்கத் தமிழ்ப் பரீட்சை.

இந்தியாவிலுள்ள சர்வகலா சங்கங்களைப் பின்பற்றி கேம்பிறிஜ் சர்வகலாசங்கத்தாரும் எங்கள் சுதேச பாஷைகளை உபபாஷைகளாகத் தாங்கள் நடாத்தும் ஸீனியர் ஜூனியர் முதலாம் பரீட்சையிற்சேர்த்திருக்கின்றார்கள. சென்ற 1919-ம் ஆ தொடக்கமாக இலங்கையிலும் தமிழ் சிங்களம் சம்ஸ்கிருதம் பாளி யென்னும் பாஷைகள் உபபாஷைகளாக மேற்படி சங்கப் பரீட்சை வகுப்புகளிற் பயிலும் மாணக்கர்களுக்குப் பயிற்றப்படுகின்றன. இக்காலத்தில் இங்குள்ள தமிழ் இஸ்லாம் மாணவருள் நூறுக்குப் பத்து விகித மானோர் "லத்தீன்" பாஷையை உபபாஷையாகக் கொள்ள எஞ்சிய தொண்ணூறு விகிதமானோரும் தமிழையே கைக்கொள்ளுகின்றார்கள.

வருடந்தோறும் நிகழும் ஸீனியர் ஜூனியர்ப்பரீட்சைகட்காகிய தமிழ்ப்பாட புத்தகங்களை ஆராய்ந்து நியமித்தற்கு இங்குத் தானே தமிழறிந்த அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சபை யிருக்கின்றது. இந்த அங்கத்தவர்களுட் பலர் வித்தியாதரிசிகளாவர். இச்சங்கத்தார் சென்ற ஏழு எட்டு வருடங்களாக இயன்றவரையில் தக்க தமிழ்ப்புத்தகங்களையே இப்பரீட்சைகளுக்குப் பாடங்களாக நியமித்துவந்தனர். இவர்களால் நியமிக்கப்படும் செய்யுட்பாகங்கள் அவ்வவ்வகுப்புகளுக்குத் தக்கனவேயெனலாம். ஆனால் சென்ற சில வருடங்களாக இப்பரீட்சைக்கு நியமிக்கப்படும் தமிழ் வசனநூல்கள் சில பல பிழைகளோடு கூடியனவும் விபரீதமான கொள்கை பொருந்தியனவுமாகக் காணப்படுகின்றன இவ்வசனநூல்கள் தென்னிந்தியாவில் நிரம்பிய தமிழறிவில்லார் சிலராற் சொற்சுவை பொருட்சுவை யின்றிப் பிறபாஷைமொழிகளும் கிராமியச் சொற்களும் திசைச்சொற்களும் விரவ எழுதப்பட்டுள்ளனவென்பது இவற்றைச் சித்தசமாதானத்துடன் நோக்குவாரெவர்க்கும் இனிது புலப்படும். இந்நூல்களை ஆசிரியர் முன்னிலையிற படிக்கும்போது, படிக்கும்மாணக்கர்களே நிந்தாசஞ்செய்து நூற்றுந்தெரிக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தவர்களின் தமிழ் நல்ல தமிழ் என்ற பிரஸ்தாபம் தமிழுலகத்தெற் பரந்திருக்க இப்படிப்பட்ட பிழைகள் பொதிந்த வசனநூல்களைப் பயிற்றுமபடி மேற்படி சங்கத்தார் விதிப்பது முறையல்ல.

மேலும், இவ்வாறான பிழைகள் பொதிந்த புத்தகப் பிரதிகளும் மாணவர்களுக்கு அவர்கள் பாடங்களை ஆயத்தஞ்செய்யவேண்டிய காலத்திற் பெரும்பான்மையும் அகப்படாதொழிகின்றன சிற்சில புத்தகங்கள் முந்திய பதிப்பு ஒழிந்துபோய்விட அடுத்த பதிப்பு, மேற்படி புத்தகம் பரீட்சைக்கு நியமித்த ஆறுமாசம் ஏழு மாசங்கட்குப்பின்னரே வெளிவருகின்றன. இப்படிப் பிந்த வெளிவருதலினாலே பிள்ளைகள் தமக்கு விதிக்கப்பட்ட பாடங்களை ஆயத்தஞ்செய்தற்குக் காலம் போதாது இடர்ப்படுகின்றனர். அரும்பொருட்டிரட்டு என்னும் ஒரு வசனநூல் நிகழும் 1928-ம் ஆண்டு ஸீனியர்ப் பரீட்சைக்குத் தமிழ்ப்பாடங்களுள் ஒன்றாக நியமிக்கப்பட்டிருக்கின்றது இப்புத்தகத்தின் முந்திய பதிப்புப் பிரதிகள் மிகச்சில மாத்திரம் அகப்பட்டன. இரண்டாம் பதிப்பு விரைவில் வருமென்று இங்குள்ள புத்தக வியாபாரிமாரும் தமிழ்ப் பண்டிதர்களும் மாணக்கரும் எதிர்பார்த்திருந்தனர். வகுப்புத் தொடங்கி 9 மாசங்களாகியும் இன்னமும் புத்தகப் பிரதிகள் அகப்பட்டில. இன்னும் பரீட்சைக்கு 3 மாசங்கள்தான் இருக்கின்றன. அந்த மூன்று மாசங்களை சென்றாலும் புத்தகப்பிரதிகள் கிட்டாபோற காணப்படுகின்றது. இவ்வாறாயின் இப்பிள்ளைகள செய்வது என்ன?

இவற்றையெல்லாம் மேற்படி புத்தகங்களைப் பாடமாக விதிக்கும் சங்கத்தார் நன்கு உணர்ந்து, தாம் விதிக்கவிருக்கும் புத்தகங்களை விதிப்பதற்கு முந்தியே தக்கனவோ என்பதையும், அவைகள் அகப்படுமோ வென்பதையும் முந்தி ஆராய்ந்தறிந்தபின்னரோ அப்புத்தகங்களை விதித்தல் புத்தியாகும்.

இப்பரீட்சைக்கு இலங்கையிற் பொறுப்பு வகித்திருப்பவர்களாகிய வித்தியாபகுதியார் இத்தமிழ்ப்பரீட்சை விஷயங்களைச் செய்யவேண்டியது ஒன்றாக; மேற்படி சர்வகலா சங்கத்தாரின் தமிழ்ப் பரீட்சை விஞாபனத்திரங்களின் பெரும்பான்மையும் எழுத்துப் பிழைகளோடு உதவப்படுதலின் மாணக்கர்கள் விடையெழுத முடியாது திகைக்கின்றனர். அவ்வாறான பிழைகள் நிகழாவண்ணம் தமிழ்த்து ஆங்கில பாட விஞாபனப் பத்திரங்கள் போல யாதும் பிழையில்லாது வரும் வண்ணஞ் செய்தல் இலங்கை வித்தியாபகுதியாரின் கடனாகும்.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்)

முதன்முதற் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற அன்று சிறிது நேரம் அங்கேயிருந்து நானுக்குப் படித்தபின்னர், தகப்பனாரும் அப்புக்குட்டிச் சட்டம்பியாரும் என்னையும் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு மீண்டுவிட்டார்கள. அடுத்தநாள் தொடக்கம் அப்புக்குட்டிச் சட்டம்பியாரே கிரமமாக வந்து அதிகாலையில் என்னை வீட்டிற் படிப்பித்தபின் பள்ளிக்கூடத்திற்குக் கூட்டிக்கொண்டு போய்விடுவார். பின்னேரம் பள்ளிக்கூடம் விடும்போது எங்கள் வீட்டு வேலைக்காரன் பள்ளிக்கூடத்தில் வந்து நின்று என்னை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போவான். ஆரம்பத்திற் பள்ளிக்கூடத்திற்குப் போவது எனக்குச் சிறிது வெறுப்பாகவிருந்தது; ஆனால் நாட்செல்ல நாட்செல்ல நான் மிக்க விருப்பத்தோடு பள்ளிக்கூடத்திற்குப் போய்வரத் தொடங்கினேன் அங்குள்ள உபாத்தியாயர்களெல்லாரும் என்மீது அன்பு பாராட்டினார்கள்; பிள்ளைகளும் என்னுடன் மிக அன்பாக நடந்தார்கள் முதலாம் இரண்டாம் தரங்களில் படித்து அந்தந்த வருட முடிவில் அவ்வவ்வகுப்புப் பரீட்சைகளிற் சித்தியடைந்தேன. மூன்றாம்வகுப்பானதும் நான் வீட்டில் ஆங்கிலம் படித்தற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. அப்புக்குட்டி உபாத்தியாயருக்கு ஆங்கிலம் தெரியாதாகையால் சின்னத்துரை யென்னும் ஒரு வாலிபரைப் பின்னேரந்தோறும் வீட்டிற்கு வந்து ஆங்கிலஞ் சொல்லித் தரும்படி எனது தகப்பனார் நியமித்தார். அப்புக்குட்டி உபாத்தியாயருக்குக் கணக்குப்பகுதி அதிகம் போதாதாகையால், சின்னத்துரையென்பவரே பின்னேரத்திற் கணக்கும் எனக்குப் படிப்பித்துவந்தார். சின்னத்துரை யென்பவர் கொஞ்சங் கடுமையாளர்; ஏதும் அவர் கேட்க நான் மறுமொழி சொல்லாது நின்றால் இல்லையேற் பிழையாக மறுமொழி சொன்னால் அவர் உடனே என்னை உருக்கிக் குட்டியடித்துவிடுவார். சில சமையங்களில் அவர் பராமுகமாயிருந்துவிட்டு நான் சரியாக மறுமொழி சொன்னாலும் அவர் என்னை அடிப்பார். இதனாலே என் ஞாபகத்திலுள்ள விஷயங்களையும் அவரைக் கண்டமாத்திரத்தே மறந்துவிடுவேன்; நான் விளங்கிய விஷயமும் அவர் முன்பு சொல்லப்போகும்போது எனக்கு மயக்கமாகவே யிருக்கும். சின்னத்துரையென்பவரைக் காணும்போது எனக்கு யமனைக் காண்பதுபோலவிருக்கும் ஒவ்வொருநாளும் மத்தியானத்திற்குமேற் சின்னத்துரையின் எண்ணந்தான என் மனத்தில் நிகழும். இராக்காலத்தில் இடையிடையே நித்திரையில் அவர் எனக்கு அடிப்பதுபோலக் கனவுகண்டு சத்தமிட்டுக் கத்தியுமிருப்பேன்; போசனஞ் செய்துகொண்டிருக்கும்போது அவரை நினைத்தால் அவ்வளவிற் பசி நின்றுவிடும் அவருடைய அநியாயத்தை என் பெற்றாருக்குச் சொன்னால் அவர்கள் என் சொல்லை ஏற்றுக்கொள்ளார்களென்பது எனக்குத் தெரியுமாதலால் அவர்களுக்கும் நான் சொல்லத் துணியவில்லை.

* * *

எங்கள் வீட்டிற்கு அயலில் வசிக்கும் வீரசிங்கமென்னும் பையனும் என்னுடன் மூன்றாம் வகுப்பிற் படிப்பவன். ஒருநாள் பள்ளிக்கூடம்விட்டு மீண்டு வரும்போது இந்தச் சின்னத்துரை மாஸ்ரருடைய கொடுமையை நான் அவனுக்குச் சொல்லி இதற்கு என்ன செய்யலாமென்று கேட்டேன். வீரசிங்கமும் என்னோடொத்த வயதுடையவன்; அவன் சிறிது யோசித்துவிட்டுப் பின் என்னைப் பார்த்து உனக்கு ஒரு புத்தி சொல்லித் தருகிறேன், அதின்படி செய்; எங்கள் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள புளியடி வைரவர் மிகவும் புதுமையானவர்; நீ அவருக்கு வெள்ளி செவ்வாயிற் கர்ப்பூரம் வாங்கிக் கொளுத்தி, சின்னத்துரை மாஸ்ரருக்கு வருத்தம்வரவேண்டுமென்று கும்பிடு; அவருக்கு வருத்தம் வந்தால் உன்னைப் படிப்பித்தற்கு அவர் வர முடியாது" என்றான். நானும் அது நல்ல புத்திதான் என்று அவனை மெச்சினேன்; வீட்டிற்குப் போனபின் தாயாரிடம் ஒரு சதம் தரும்படி கேட்டேன்; தாயார் உனக்கேன் காசு என்று கேட்க, எனக்குப் படிப்பு வரவேண்டுமென்று வைரவருக்குக் கர்ப்பூரம் வாங்கிக் கொளுத்தவேணுமென்றேன்; தாயார் சிரித்துக்கொண்டு உடனே ஒரு சதந் தரநான் வாங்கி வைத்துக்கொண்டேன; அடுத்தநாள் பள்ளிக்கூடத்திற்குப்போய் மீண்டு வரும்போது வழியிலுள்ள கடையில் கர்ப்பூரம் வாங்கிக் கொண்டுபோய் நானும் வீரசிங்கமுமாக வைரவருக்குக் கொளுத்தினோம்; வைரவசுவாமி சின்னத்துரைமாஸ்ரர் வருத்தம்வந்து சாகவேணுமென்று சொல்லி நான் கும்பிட்டேன்; அதனைக் கேட்ட வீரசிங்கம் அடே, அடே, சாகவேணுமென்று சொல்லாதே, வருத்தம் வரவேண்டுமென்றுமாத்திரஞ் சொல்லு என்றான் சாகாவிட்டால் வருத்தம் மாறினவுடன் சின்னத்துரை மீண்டும் படிப்பிக்க வருவார்தானே, ஆனபடியாற் சாகத்தான வேணும் என்று நான் சொன்னேன்; அதுவும் ஒரு நியாயத்தான் என்று வீரசிங்கஞ் சொல்லி என் பேச்சை ஒத்துக்கொண்டான்.

* * *

எங்கள் நேர்த்திக்கடனாலும் வழிபாட்டினாலும் சின்னத்துரை மாஸ்ரருக்கு வருத்தமாயினும் மரணமாயினும் வரவில்லை; அவர் முன்னிருந்ததைக்காட்டிலும் சுகதேகியாகக் காணப்பட்டார்; ஆனால் வைரவரை நாம் மூர்த்தக் குற்றஞ்சொல்ல முடியாது; சின்னத்துரை மாஸ்ரருடைய நெருக்கத்தினால் நான் வயிறார உண்பதில்லை யென்பதையும் எப்பொழுதும் கவலையோடு திரிகின்றேனென்பதையும் படிப்புக்குப் பயப்படுகின்றேனென்பதையும் எமது தாயார் விளங்கிக்கொண்டு அதனைத் தகப்பனாருக்குச் சொல்ல, தகப்பனார் அந்த மாசமுடிவில் சின்னத்துரையென்பவரைப் படிப்பிக்கவேண்டாமென்று ஏதுமொரு நியாயஞ்சொல்லி விடவேண்டுமென்று நிச்சயித்தார் அப்படியே அந்த மாசமுடிவில் அவரை விட்டுவிட்டார். அவர் இனிமேற் படிப்பிக்க வரமாட்டார் என்று நான் கேள்விப்பட்டவுடனே எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஒரு எல்லையில்லை நான் மிக்க முயற்சியோடு படிக்கத் தொடங்கினேன். இந்த விஷயத்தில் என் அனுபவத்தைக் கொண்டு நான் சொல்லத்தக்கது நின்றுண்டு எத்தனையோ குழந்தைகளைவிவேகிளாக்குவதும் மந்தராக்குவதும் பெரும்பான்மையும் அவர்களுடைய உபாத்தியாயர்களேயாவர் அப்புக்குட்டிச் சட்டம்பியாரிடத்தும் பள்ளிக்கூடத்தும் சில காலஞ் செல்ல மிக்க ஊக்கத்தோடு படித்த நான் சின்னத்துரை யென்பவர் முன்னிலையில் பெரும் மந்தனாகக் காணப்பட்டேன். உபாத்தியாயர்களாயுள்ளார் குழந்தைகளிடத்து அன்புகாட்டி விளையாட்டாகப் படிப்பித்து வருவரேல் குழந்தைகள் பெரும் விருப்பத்தோடு படித்துவிடுவார்கள் இதனைவிடுத்து, பிள்ளைகளை அச்சுறுத்திப் படிப்பிக்கப் புகின் அக்குழந்தைகள் மனசில் அச்சமும் ஏக்கமும் படிப்பின்மீது வெறுப்பும் ஏற்படுமேயன்றி ஒருபோதும் படிப்பில் மனஞ் செல்லாது எனக்குக் கணக்குப் போகாது, போகாது என்று சின்னத்துரை மாஸ்ரர் சொன்னமையினால் நானும் அது ஏதோ எனக்குக் கிட்டாத பொருளாகுமென்று நினைத்துக் கணக்கில் ஒன்றும் அறியாதவனானேன். ஆனதால், உபாத்தியாயர்கள் ஒருபோதும் பிள்ளைகளைப்பார்த்து இவனுக்குக் கணக்கு வராது பூமிசாஸ்திரம் போகாது, எழுத்துத் திருந்தமாட்டானென்று பிள்ளைகளுக்குமுன் சொல்லி அவர்களைத் தைரியவீனப்படுத்த வொண்ணாது. (வரும்.)

## மோட்டார்ரத அபாயம்.

சென்ற திங்கட்கிழமை 2 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குப் போகுந் தெருவீதியில், 3-ம் மைலுக்கு அணித்தாக, பாடசாலையினின்றுந் திரும்பி வந்த ஓர் 8 வயதுச் சிறுமியை, எதிராக ஓடிவந்த 355-ம இலக்கங் கொண்ட மோட்டாரதம் தட்டி வீழ்த்தி நெரித்துவிட்டது. உடனே சிறுமி யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டு அங்கே அன்றிரவு உயிர் துறந்தாள். சாரதி பிணையில் விடப்பட்டிருக்கிறான். மோட்டாரதச் சாரதிகளாகிய வாலிபர் உயிரைத் திரணமென மதிக்கிறார்கள். ஆகையால் மோட்டார்களும் மற்றும் வண்டிகளும் இடையறாது செல்லும் இத்தெருவீதிகளில் சிறுவர் சிறுமியரைத் தக்க பாதுகாப்பின்றி நடமாட விடுதல் புத்தியன்றாம்

## விவாகம்.

நிகழும் விபவஞு ஆவணிமீ" கஉ சனிக்கிழமை இரவு 8 மணியளவில் நிகழ்ந்த மீனலக்கின சுபமுகூர்த்தத்தில், கொக்குவில் பிரமஸ்ரீ ச. இ. சிவாசாமலிங்கையர் அவர்கள் புத்திரன் கங்காதர ஐயருக்கும், பிரமஸ்ரீ V. சின்னையர் அவர்கள் புத்திரி ஸ்ரீமதி பாக்கியரத்தின அம்மாளுக்கும் விவாகம் சிறப்பாக நிறைவேறியது தம்பதிகள் அஷ்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் சிவபிரான் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

நிகழும் விபவஞு ஆவணிமீ" கஉ சனிக்கிழமை இரவு 2 மணியளவில் நிகழ்ந்த மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் தெல்லிப்பழை மேற்கு ஸ்ரீ திருச்சிற்றம்பலம் அவர்கள் புத்திரன் நாகரத்தினத்திற்கும் ஷை ஊர் ஸ்ரீ க. நவரத்தினம் அவர்கள் புத்திரி ஸ்ரீமதி தையல்நாயகிக்கும் விவாகம் சிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று வாழும்வண்ணம் இறைவன் திருவருள் பாலிப்பாராக.

## புகைரதஸ்தான அதிகாரி அடிக்கப்பட்டமை.

கொஸ்காம என்னும் புகைரத ஸ்தானத்திலுள்ள ஸ்தான அதிகாரியாகும் ஸ்ரீ சுந்தரம் என்பவரை அந்த ஸ்தானத்தில் வேலைபார்க்கும் ஒரு பொலிஸ் அடித்தும் கத்தியாற் குத்தியும் விட்டனன். கத்திக்குத்து அபாயமானதல்ல. ஆனாலும் அவரடைந்துள்ள காயங்கள்காரணமாக அவர் அவிசாவலை வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே சிகிச்சை செய்யப்படுகின்றார்.

## குடிவகையை அகற்றுதல்.

களுத்துறைப் பட்டினத்திலும் அதன் அயற்கிராமங்களிலும் குடிவகை வியாபாரத்தை முற்றாய் அகற்றிவிடும்படி களுத்துறை மதுவிலக்கபிமானிகள் முயற்சி செய்கிறார்களென அறிந்து சந்தோஷமடைகின்றோம். அந்நியநாட்டுக் குடிவகை விற்கக் கொடுக்கப்படும் அநுமதிகளைச் சிக்கிரம் நீக்கிவிட வேண்டுமென அரசாட்சியாரைக் கேட்பதற்கு நகர மண்டபத்தில் செப்டெம்பர்மீ" 8-ம் திகதி ஒரு பிரசித்த கூட்டம் நடைபெறுமென அறிகின்றோம்.

## புகைரத விபத்து.

களுத்துறையில் அடிக்கடி புகைரத விபத்துக்கள் சேர்ந்துகொண்டே வருகின்றன. சென்ற சனிக்கிழமை 2 மணியளவில், சாமான்கள் க்ஷேமித்து வைக்கப்படும் வீட்டுக்குப் பக்கத்தில் வண்டிகளைத் தொடுத்தும் கழற்றியும் கொண்டு நின்ற சாமான் ஏற்றும் புகைரதம் ஒன்று ஷை வீட்டுக்குப் பக்கத்திலுள்ள பாதையின் அந்தத்திற்கு ஓடியது. புகைரத யந்திரத்தை மீட்டுக்கொள்ள அதிக நேரஞ் சென்றது கடைசியாகப் புகைரதத்தின் முன்புறத்திலுள்ள முனைப்பு அதிகம்பழுதடைந்திருந்தபடியால் அது யந்திரத்திலிருந்து அகற்றப்பட்டது.

## அபின் வழக்குகள்.

அநுராசபுரத்தில் இருபொலிசார் தமது கடமையைச் செய்துகொண்டு நிற்கும் பொழுது இரண்டு வண்டிகள் புகைரதஸ்தானத்திலிருந்து பட்டினத்தைநோக்கி வந்ததைக் கண்டனர். இவைகளிற் சந்தேகங் கொண்ட ஒரு பொலிசர் ஒரு வண்டியையும் அதற்குள்ளிருந்த பாறுபதி யென்னும் ஓர் யாழ்ப்பாணப் பெண்ணையும் பொலிஸ்தானத்திற்கு அழைத்துச் சென்று அங்கே குறித்த பாறுபதியை ஒரு பெண்ணைக்கொண்டு சோதித்துப் பார்த்தபொழுது மூன்று உருண்டை அபின் அரையில் மறைத்து வைத்திருப்பதைக் கண்டார்கள். எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும், ரூபா 750 அபராதம் விதிக்கப்பட்டது.

கணபதியென்று மொருவன் 5 கிறேன் அபின் வைத்திருந்தபோது பொலிசாரற் பிடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டான். இவனுக்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டது.

அப்துல்காதர் என்று மொருவன் 9 அவுன்ஸ் 166 கிறெயின் அபினும், டேவிட் என்னு மொருவன் "பீடி"யென்னுஞ் சுருட்டுக்குள் கஞ்சாவும் வைத்திருந்தபோது பொலிசாரற் பிடிக்கப்பட்டனர். இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும். இவர்களுக்கு முறையே ரூபா 750-ம், ரூபா 50-ம் அபராதம் விதிக்கப்பட்டது.

### ஒரு தனவந்தர்.

புகையிலை வியாபார சமுதாயத்தின் அக்கிராசனராகவிருந்த சேர் ஜோர்ஜ் உவில்லின் என்பவருடைய ஆதனம 1,00,00,000 பவுண் பெறுமதியுள்ளதென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அரசினருக்கு இத்தொகையில் 40,00,000 பவுண் மரண வரியாகச் செலுத்தப்படுமாம்.

---

### இலங்கை மாதொருவர் ஆகாயரதப் பிரயாணஞ் செய்தமை.

பாணந்துறையில் நியாயதுரந்தரராக விருக்கும் மிஸ்டர் F. A. C. சிறிமண்ணே என்பவரும் அவரது பாரியாரும் ஐரோப்பாவில் 6 மாதங்களுக்குத் தங்கிச் செப்டெம்பர் மீ 2உ இலங்கை வந்து சேருவார்கள். பேர்லின் நகரிலிருந்து லண்டனுக்குத் திரும்பும்பொழுது ஆகாயரதத்தில் பிரயாணஞ் செய்து 8 மணித்தியாலத்தில் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இரண்டிடங்களுக்குமிடைத் தூரம் 800 மைலாகும். சமது மகத்துவத் தங்கிய அரசர்பெருமானும் அரசபெருமாட்டியும் பக்கிங்காம் அரண்மனையில் நடந்த விருந்துக் கொண்டாட்டத்திற்கு அவர்களை யழைத்து மரியாதை செய்தனராம்.

---

### சாஸ்திரி கல்லூரிக்கு அத்திவாரக்கல் இடப்பட்டமை

தென்னாபிரிக்காவில் இந்தியர்களுக்காகக் கட்டப்படும் பயிற்சிக் கல்லூரிக் கட்டடத்திற்கு இராச்சிய பரிபாலனஞ் செய்வோரால அத்திவாரக்கல் இடப்பட்டது. அப்பொழுது பெருந்தொகையான இந்தியர்களும் ஐரோப்பியருஞ் சமுகமளித்தனர். உபயக்காரரின் கேள்விப்படி அது சாஸ்திரி கல்லூரியெனப் பெயர்பெறும் அரசாட்சியார் அதைத் தருமச் சொத்தெனக் கொண்டு விருத்திசெய்துவருவார்களென இராச்சியபரிபாலனஞ் செய்பவர் வாக்களித்தனர்.

---

### இந்தியர் ஐவர் கொல்லப்பட்டார்.

சென்ற 15உ பட்ஸ் பட்ஸ் என்னும் இடத்திற்புகைரதப்பாதை தெருவீதியை ஊடறுத்துச் செல்கின்றது. அந்த இடத்தில் ஒரு சாமான்கள் ஏற்றிச் செல்லும் புகைரதமும் ஐவர் பிரயாணஞ் செய்த ஒரு மோட்டாரதமும் ஒன்றுடனொன்று மோதுண்டன. அந்த மோட்டாரதத்திற்குள்ளிருந்தவர்களில் ஒருவர் வங்காளப் பொலிஸ் உதவிப் பரிசோதகரும், ஒரு 8 வயதுச் சிறுமியும், ஒரு 60 வயதுக் கிழவியுமாவர். உயிருடன் எஞ்சியிருப்பது அவ் உதவிப் பரிசோதகரின் 18 வயதுடைய மனைவியாகும். அவளும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையிலிருக்கின்றாள். இவர்களெல்லோரும் பட்ஸ் பட்ஸ் என்னுமிடத்திலுள்ள பொலிஸ்தானத்திலிருந்து கல்கத்தாவிலுள்ள ஐகோர்ற்றுக்கு யாத்திரரசோக்கமாகச் செல்லும் பொழுதே இவ்விபத்து நிகழ்ந்தது.

---

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

—:o:—

மநுநீதி சதகம்.

இந்நூல் அற்ப கல்வியறிவுடையவர்களும் படித்து உணரத்தக்க நீதிகளைக் கூறுஞ் செய்யுட்களைக் கொண்டது இக்காலத்திற்காகிய பல நீதிகள் ஏனைய சதகங்களைக் காட்டிலும் இச்சதகத்தில் விசேஷமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பாக்கள் சொற்சுவை பொருட்சுவை உடையன இதனை இயற்றியவர் திருவெண்ணெய்நல்லூர் இராசப்ப நாவலரவர் சென்னை, சாது ஸ்ரீ இரத்தின சற்குரு புத்தகசாலையதிபர்கள் இந்நூலை ஸ்ரீ அ. மகாதேவர்செட்டியாரவர்களைக் கொண்டு புதிய முறையில் அமைப்பித்து அழகுற அச்சிட்டிருக்கின்றனர். பிரதியொன்றின் விலை அணா 8. மநுநீதி சதகத்துள்ள இரு செய்யுட்களை மாதிரிக்காக இங்கே அநுவதித்துத் தருகின்றேம்.

[கஅ. சான்றீனர் சோதனை]

'நெற்றியில்வியர்த்தலும்,கடைவாயைநக்கலு(ம்)
நின்றிட லில்லாமலும்,
சோரமுகவடிவுமாறலும்,காலால்
நிலங்கீறலும், சரீரம்
முற்றுமேஎதறலும்,அடுத்தடுத்துப்பெரு
மூச்செறிதலும்,பூமியின்
முகம்வளைத்திடலும்,உதடினைமெல்லலும்,
மொழிமாறலும்,வேறொரு [பேச
குற்றம்இலர்போலவுங்காரணம்இலாமலே
கூப்பிடலும்,இவைகள்போலும்
கொண்டசான்றினைச்சோசனைசெய்து,வஞ்
சொன்னாதவிடு'என்பார்; [சுரோத்
மற்றுளைவிடேன்'என்ன அருள்புரியும்வன்னைவ
மயிலன்முத்தையமதவேள்
மனதில்அனுதினமு(ம்) வினைகரு இமையமலை
மருவுபழமலைநாதனே! [மணிவைத

[கரு இன்றுற்பட்ட கடனை இன்றே கொடுப்பதுவாம்.]

கணவனது கடனைமனைவியும்,மனைவியால்வந்த
கடனையவன்கணவனும்,
கருதுதாயும்தந்தையும்புதல்வரால்வந்த
கடனையுந் தருகொளுது;
மணவாளன் மரணமுற்ற போது"தீர்"என்று
வசனித்த கடன்மனைவிசம்
மதிலானாவிடினும் அவனுடையபொருளி
மனைவியே யதல்வேண்டும்; [னைபடையின்
கணைவிற்கொள் வேடர்,வண்ணார்,இடையர்,
கள்விளைஞர், செக்காரிவர் [கூத்தாடி
காதலியெனுமமனைவி படுகடனையவனுடைய
கணவன்கொடுத்தல்வேண்டும்;
மணிஅரவபூஷணம் அணிந்தசக ரட்சகா!
மயிலன்முத்தையமதவேள்
மனதில் அனுதினமு(ம்) வினை தரும்இமய
மருவுபழமலைநாதனே! [மலைமணிவைத

### ஜனமித்திரன்.

இது சென்னையிலிருந்து வெளிவரும் சஞ்சிகைவடிவமான ஒருதமிழ்மாதாந்தப் பத்திரிகையாகும். இதன்கண் மதுவை யொழிப்பதற்கு வழி முதலாம் பல அரிய விஷயங்கள் காணப்படுகின்றன. வருடக்கிரயம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ரூபா 1. ஏனையநாடுகளுக்கு ரூபா 1 அணா 4. இப்பத்திரிகையைப் பெற விரும்புவோர் சென்னை, திருவல்லிக்கேணி, ஜனமித்திரன் மானேஜர்மூலமாகப் பெறலாம்.

அடி பிரதிகளை நன்றிபறிதலுடனேற்றும்.

---

### இங்கும் அங்கும் சேர்த்த நற்போதனைகள்.

பத்திராதிப,

கிழவன் பேச்சு வாலிப நேசருக்குக் கசப்பாயிருத்தல் நூதனமன்று. வாக்குமாறுத கிழவனரில் தாக்குங்குணம் பத்திராதிப! நம்மாட்டும் உள்ளது. மிஸ்டர். கென்சமன் கௌரவ ஸ்ரீபாலசிங்கம் முதலியோர்போல் நான் படித்தவன் அல்லன். கிறீஸ்தவனுமல்லன். என் பிழைகளைத் திருத்திவிடில் நான் சந்தோஷப்படுவேன்.

"என்றும் என்குறை எங்கும் பரப்புவோன்
என்றன் மாணவனாயினும் என்னிடம்
நின்றுவேலை நிகழ்த்துவனென்னினும்
மன்ற என்குரு என்ன மதிப்பெனல்"

(1) கல்வி மற மற நற்குணமும், அடக்கமும் அமைதியும் பெருகும் என்ப. ஞானமானது, படிப்பினாலும் பெரியோர் சகவாசத்தாலும் வரும். பெரியோர் சகவாசத்தினால் அடக்கம் அமைதி முதலிய நல்லொழுக்கங்கள் அதிகரிக்கும் மனிதர் கல்வியென்னும் தங்க ஆபரணத்தின் மத்தியில் நல்லொழுக்கம் என்னும் நவரத்தினப் பதக்கத்தைக் கோத்து அணியின்றிப் பிரகாசியார். இவ்வணிக்கும் இதனை அணிபவருக்கும் நீங்காத கீர்த்தி நிலவும்; எங்கும் பரவும். உள்ளத்துறவுள்ள உண்மையான யோகிகள் ஞானியின் கீர்த்தி உலகுள்ளளவும் நின்று ஒளிகாலும். ஞானத்தைச் சம்பாதிப்பதற்கு நாளை நாளை என்று நாட்கடத்தாது, இன்றே, இச்சணமே முயலுதல் மேலான செயலென்று ஓர் ஞானி கூறுகின்றார்.

(2) பெரியோர்என்று தம்மை நினைப்போர், தம்மோடு தொடர்புடையராய்த் தமக்கு அத்தியாவசியம் வேண்டற்பாலாரிற் சிலரைப் பகைத்து அவர்கள் அதிருப்தி அடையுமாறு விட்டிருத்தல், ஒரு மரக்கலத்தின் மத்தியிலே ஓர் துவாரத்தை அசட்டையாய் விட்டு இருத்தல் போலாம் என்றார் அனுபவ ஞானியாகிய அமிர்த குணபோதினிப் பத்திராசிரியர். இது உண்மை; முற்றும் உண்மை.

அறிவு ஞானமற்ற ஆடம்பர ஞானமூர்த்தர் சிலர் இக் கூற்றை மறுத்து, மாறுகூறி, சமூக வாழ்க்கையைக் கெடுத்துச் சமாதான பங்கஞ் செய்து வாளா கெடுகின்றனர். கெடுக்கின்றனர்.

(3) அரசாசிரியர்பலர், உண்மையாகவே கடவுட் பயம், தியானம், பத்தி முதலிய உடையராய் அமர, நாகரீகர், கற்றவர்எனத் தம்மைத் தாமே மதித்துள்ள மமதையுடையார் சிலர் வீட்டுப் பத்தி, கோட்டுப்பத்தி, மோட்டுப் பத்தி, ஆட்டுப் பத்தி, சாட்டுப் பத்தி, புருடாப் பத்தி யென ஒருவாறு பரிகாசம் பண்ணித் தம்மையும், பிறரையும் இளிவருஞ்சத்தியாரையும் பாழாக்கி வாருக்கு நேசஞ் செய்வார்போல நடித்து நாசஞ் செய்கின்றனர் என அனுபவ ஞானங் கூறுகின்றது.

(4) திருவிழாக் காலங்களிலே, வீடு, வாசல் துணி, மணி, பாத்திரங்கள் முதலியன சுத்தமாயிருத்தல் சந்தோஷமே. மனதைப் பற்றிச் சுத்தம் அசுத்தம் அவரவருக்கே தெரியும். இருதய சுலத்தை இறைவனே அறிவன் என்பதைத் திருவிழாக் காலங்களிலே விரதம் அனுட்டிப்போரும் பிறரும் அறியரோ?

சி. கா.
சொக்குவில்.

---

## சைவ அநாதப் பிள்ளைகள் சாலையும் மாணவர் இல்லமும்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அநாதப்பிள்ளைகள் எல்லோரும், தமிழ் 5ம்தரம் அல்லது அதற்குமேற்பட்ட வகுப்புகளிற் சித்தியடைந்த ஏனைய மாணவர்களும் இச்சாலையிற் சேரலாம்.

இப்பிள்ளைகள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கப்படுவர்.

பிரதான நோக்கம்.

1. தராதரம் பெற்ற உபாத்தியாயராக்கல்.
2. கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்குத் தகுதி உடையவராக்கல்.
3. பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டிதபரீட்சைகளுக்குத் தகுதியுடையவராக்கல்.
4. கமத்தொழில் நெசவுத்தொழில் முதலிய கைத்தொழில்களிற் தேர்ச்சியுடையவராக்கல்.

அநாதப்பிள்ளைகளுக்கு வேதனமின்றி உணவளிக்கப்படும். ஏனையோர் விடுதிச்செலவில் ஓர் பகுதியாவது கொடுத்தல்வேண்டும்.

(M 69)

ச. சபாபதிப்பிள்ளை. திருநெல்வேலி,
சு. இராசரத்தினம், சைவவித்தியாவிருத்திச்சங்கம்.

---

### ஒடுக்கப்பார்வை.

பொறுக்கி யெடுத்தது

By M. Andrew

அன்றைக்குத்தொப்பிதிருத்தும் ஒருவனிடம் எனது தொப்பியைக் கொண்டுபோனேன். அது மழையிலும், வெயிலிலும், காற்றிலும் படாத பாடுபட்டு நிலைகுலைந்திருந்தது. ஒரு அவசியத்தினிமித்தம் அதை இயன்றவரையிற் புதிதாக்கி யணியவேண்டி யிருந்தது. தொப்பி திருத்துவோன் என்னைக் கண்டதும் எனக்கோர் ஆசனமளித்து, தொப்பியை வாங்கித் தன் வேலையைத் தொடங்கினான்.

* * *

"ஆம், தொப்பிகளின் அளவும், தலைகளின் அமைப்பும் எப்பொழுதும் வித்தியாசமாய்த்தான் இருக்கின்றன. உங்களுடைய தலை பொரு சாதாரணமான தலைதான்" என்றவன், எனது முகம் சற்று இருளடைந்ததைக் கவனித்து, "அவ்வளவு விநோதமான தலையல்ல" வென்று ஒருவாறு எனது கவலையைத் தீர்த்தான்.

* * *

"ஆனாற் சில தலைகளிருக்கின்றன. அதோ இருக்கிற தொப்பியைப் பாருங்கள். அதைத் தரிப்பவரின் தலை ஒரு நவீனமான தலை; அது நீண்டதாயும், ஒடுங்கியதாயும், கழலைகள் பொருந்தினவாயும் இருக்கின்றது. விந்தையானவோர் தலைதான்", எனக் கூறினான்.

* * *

"தொப்பிகளின் அளவைப் பற்றிப் பேசுவதானால்—அளவிலே அதிகம் வித்தியாசம் இருக்கிறது. நியாயதுரந்தரர் பலருக்குத் தொப்பி திருத்தியிருக்கிறேன்; ஆச்சரியப்படத்தக்க பெரிய தலைகள். அவர்களின் தொப்பி யளவைக் கண்டீர்களானால் உண்மையாக நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். அவர்களின் தலை யவ்வளவு பெரிதாயிருப்பது அவர்கள் அதிகமாய் யோசித்து மூளைக்கு வேலை கொடுப்பதனாலே யாயிருக்கலாம்" என்று விஸ்தரித்தான்.

* * *

"அங்கே தொங்குகிற தொப்பிகளும்—அவர்களுடையது. (ஒரு கீர்த்திவாய்ந்த நியாயதுரந்தரரின் பெயரைச் சொன்னான்) "அத்தலை மிகவும் பெரிய தலை. தொப்பியின் அளவு 7½. இவர்களில் அநேகர் (நியாயதுரந்தரர்) 7 அளவுள்ள தொப்பி யணிகிறார்கள்", என்றான்.

* * *

தொப்பிதிருத்துவோன் இவ்வளவில் நிறுத்தவில்லை. "ஒருவனுடைய தலையின் அளவு அவனது வேலை, முயற்சிக்குத் தக்கதாயே யிருக்கிறது. சிலகாலத்துக்கு முந்தி நான் ஒரு கடற்கரைப் பட்டினத்திலிருந்து வேலைசெய்தேன். அப்பொழுது கப்பல் மாலுமிகளின் தலையைக் கவனிக்கவேண்டிய வசதி யேற்பட்டது. புதினமான தலைகள்தான்! கடற் பிரயாணத்திலுள்ள அதிசயமும் கவலையும் அவர்களது தலையின் உருவத்தையும் அளவையும் மாற்றிவிட்டன வெனலாம்", என்று நியாயமுரைத்தான்.

"கடற்பிரயாணஞ் செய்யும்பொழுது, எந்த நேரம் ஒருபனிமலை சுழல்காற்று அல்லது எதிர்க்கவியலாத நீரோட்டம்......—" நான் எனது தொப்பியையும், சாதாரணமான எனது தலையையும் எடுத்துக்கொண்டு வெளியிற் சென்றுவிட்டேன். அந்தத்தொப்பி திருத்துவோனுக்கு நான் ஒரு 6¾ அளவுகாரன்தான். அவனது கணிப்பைப் பெறாதவன்; "பெரிய தலையுள்ளவர்களுக்குத்தான் நல்ல மூளை, மற்றவர்களுக்கு இல்லையோ?" வென்று அவனைக்கேட்க எனக்கொருமுறை மனம் வந்தது. ஆனால் அவனோடு என் விவாதம் என்று யோசித்துச் சும்மா விருந்துவிட்டேன்.

* * *

அறிவாளிகள் பொதுவாய்ப் பெரியதலையுள்ளவர்களாய் இருந்தார்களென்பதை நான் மறுத்துக் கூறவில்லை. பிஸ்மாக், கிளாற்ஸ்ரோன், கைம்பல் பனர்மன் முதலிய பெரியோருடைய தலைகளின் அளவு 7¼ என்பது எல்லோர்க்கும் தெரிந்த விஷயம். பைறனுடைய தலை சிறியதுதானே; வேஷக்ஸ்பியரைத் தவிர்த்தால், பைறனுக்குச் சரியானவர் ஒருவராவது ஐரோப்பாவிற் பிறக்கவில்லை யென்று கேம்பே யென்னும் புலவர் சொல்லுகிறார். பொதுவாக, சிறிய தலையுடன் பெரிய புலமை யிருப்பதை நான் சந்தேகித்தாலும், எனது தலையும் மிகச் சிறிதா யிருப்பதால் கேம்பே சொல்வதை யொத்துக்கொள்ளுகிறேன்.

* * *

மூளைகளின் பெருப்பம் அல்ல, அவைகளின் இறக்கமான மடிப்புகளின் தொகையே மூளையின் விசேஷத்தைக் காட்டுகின்றதென்று ஜேம்ஸ் என்னும் நிபுணர் கூறியிருக்கிறார்.

"என்னுடைய தலை அவ்வளவு பெரிதாயிராவிட்டாலும் எனது மூளை மடிப்புகளின் இறக்கத்தைப்பற்றி ஒருவிதமான குற்றமுஞ் சொல்லமுடியாது" தென்று அந்தத் தொப்பி திருத்துவோனுக்கு நான் என் சொல்லவில்லையெனக் கொஞ்சந் துக்கப்பட்டேன்.

* * *

தொப்பி திருத்துவோனுக்கும் எனக்கும் நடந்த இச்சம்பாஷணையை நினைத்தால் இன்றொரு விஷயம் எனக்கு நினைப்புக்கு வருகின்றது. நாங்களொவ்வொருவரும் உலகம் முழுவதையும் எங்களெங்களுக்கு வசதியாயிருக்கும் சிறு துவாரங்கள் மூலமாகவே பார்த்துக்கொள்ளுகிறோம். உதாரணமாக இத் தொப்பி திருத்துவோன் ஜனங்களெல்லோரையும் தொப்பி யளவைக்கொண்டே யளந்து விடுகிறான். மிஸ்டர் சின்னத்தம்பியின் தொப்பியினளவு 7½ யாயிருக்கலால் அவரை அவன் புகழ்ந்து பாராட்டுகிறான். கனம் முருகேசரின் தொப்பியினளவு 6¾ யாயிருக்கிறபடியால் அவரை இலேசாய் ஒதுக்கி வைத்துவிடுகிறான்.

* * *

ஏன் தொப்பிதிருத்துவோன் மாத்திரமா? உனது தையற்காரன் என்ன செய்கிறான்? உனது உடை எவ்வித துணியாற் செய்யப்பட்டதென்பதைப் பார்க்கிறான். உடுப்பின் மாதிரியையும் பளபளப்பையும் நோக்குகிறான். நீ அத் தையற்காரனுக்கு உடுப்புகள் போடுங் கொடிபோற் காணப்படுகின்றாய். நீ எப்படிப்பட்ட உடுப்புகளைக் காவிக்கொண்டு திரிகிறாயோ அவைகளினாலேயே கணக்கெடுக்கப்படுகின்றாய்.

* * *

இப்படியே உனது சப்பாத்துக்காரனும், அவனும் உன்னை உன் பாதரக்ஷையினாலே யளந்துவிடுகிறான். உனது தொப்பி மிகவும் துலக்கமாயிருக்கலாம்; உன் உடைகளோ விலையுயர்ந்தனவாயும், ஒழுங்காய்த் தைக்கப்பட்டனவாயு மிருக்கலாம். ஆனால் உனது சப்பாத்துக் குதிப்பக்கத்தால் தேய்ந்து இருக்குமானால் உன்னைச் சப்பாத்துக்காரன் மதிக்கமாட்டான். உனது உன்னதமான தொப்பியும், நாகரீகமான உடையும் உன்னைச் சப்பாத்துக்காரனின் அவமதிப்பினின்றும் மீட்கமாட்டா. அவன் உனது குதிதேய்ந்த சப்பாத்தைப் பார்க்கிறானேயன்றி உன் உடையையும் தலையையும் கவனியான்.

* * *

இரு தினங்களுக்கு முன்னர் புகைரதத்திற் பிரயாணஞ் செயயும்பொழுது இருவர் ஏதோவொரு பத்திரிகையை வாசித்துவிட்டுக் கடும் வாதம் புரிந்தனர். ஒருவர் (70 அல்லது 80 வயசு வரையி லிருக்கும்) "இல்லை, அவர் சொல்வது முழுதுஞ் சரி. பெண்கள் மயிரை வளர்த்து அதில் சதாகாலமும் சிரத்தைசெலுத்துவதனால் அவர்களது பொன் போன்ற நேரம் மண்ணாய்ப் போகிறதே. அன்றியும் நீண்ட மயிர் அவர்களது தேகசுகத்தையுங் கெடுத்துவிடுகின்றதே", என்று மிகவும் உருக்கமாக வாதம் புரிந்தார். மற்றவர் (25 வயசுக்குட்பட விருக்கும்) "பெரியவரே, சுகத்தையும், நேரத்தையும் நீர் கவனித்தீரேயன்றி, அழகு என்று ஒன்று இருக்கிறதே; அதைப்பற்றிச் சற்றுவது சிந்தித்தீரா?" வென்று ஆத்திரத்தோடு கேட்டார்.

* * *

இவர்களென்ன, தொப்பிக்காரனிலாவது அல்லது சப்பாத்துக்காரனிலாவது திறமானவர்களா? ஒருவர் பெண்களைத் தேககசுமென மயங்குகிறார்; மற்றவர் அழகென மருள்கின்றார். இருவரும் அவர்களின் மயிரைக் கொண்டே தீர்ப்புச் சொல்லிவிடுகிறார்கள்; மயிரை வளர்த்தல் அல்லது குறைக்குதல் நல்லதோ கூடாதோ வென்பதைப்பற்றி ஆடவர்களிலும் பெண்களே நன்றாயறிவார்களென்பதை இவ்விருவரில் ஒருவராவது சிந்திக்கவில்லையே யென்பதை நான், நினைத்தபொழுது தொப்பிக்காரன் முதலியோர் அவ்வளவு பிழைவிட்டவர்களல்லவென்று யோசித்தேன்.

---

### தேகவியோகம்.

மடடுவிலைச் சென்மஸ்தானமாகவும் நீர்வேலியை வாசஸ்தானமாகவுங் கொண்ட வைத்தியர் ஸ்ரீ சின்னத்தம்பி இளையதம்பியென்பவர் சென்ற வெள்ளிக்கிழமை (24-8-2 ) மாலை 6½ மணியளவில் தமது சிருகத்திற் றேகவியோகமெய்தினர். இவர் வைத்திய விஷயத்தில் திறமையுள்ளவர். கதிர்காம யாத்திரை சிதம்பர யாத்திரை முதலிய தல யாத்திரைகள் அநேகமுறை செய்துள்ளவர். இவரை யிழந்து துன்புறும் சுற்றத்தினருடன் எமது அநுதாபமும் இருக்கிறது.

இவருடைய அந்திய கிரியையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு வசிந்தனுப்பிய ரூபா 1 பெற்றும்.

## சாதுவின் சமர்த்து.

1837-ம் வருடத்தில், சாது ஹரிதாஸ் என்பவர் பஞ்சாப் மகாராஜா ரஞ்சித் ஸிங்கின் அரண்மனையில், பலர் முன்பாகப் புதைக்கப்பட்டு நாற்பது நாட்கள் சென்றபின் மீண்டும் உயிர்பெற்றெழுந்த விஷயம், அவ்வமயம் அதிசயத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஓர் ஆங்கிலேயரால் இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தை 'பயனீயர்' பத்திரிகை குறித்திருக்கிறபடி சுருக்கித் தருகிறோம்.

"குறித்த சமயம் வந்ததும் நானும் ரஞ்சித் ஸிங் ராஜாவும் அவ்விடத்திற்குச் சென்றோம். லாகூர் கொட்டாரத்தின் சமீபத்திலுள்ள தோட்டத்தில் அவ்விடமிருந்தது. அக்கட்டடத்துக் கதவுகளெல்லாம் மூடி முத்திரை வைத்தபடியே இருந்தன. காற்றும் உள் நுழைய முடியாது. அப்பால் கதவு திறக்கப்பட்டது. உள் நுழைந்தோம். எங்கும் இருட்டாகவே இருந்தது. சாதுவின் வேலைக்காரனும் எங்களுடன் வந்தான். பின்னர் அங்கு ஒரு சிறு அறை காணப்பட்டது. அதன் கதவும் மூடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டிருந்தது. அதனுள்ளேயே சாதுவின் உடல் அடக்கஞ் செய்யப்பெற்றிருந்தது. அப் பெட்டியை வெளியிலெடுத்து மூடியைத் திறந்தார்கள். அதற்குள், துணியால் மூடிக் கட்டப்பட்டிருந்தபடி சாதுவின் உடலிருந்தது. விஷயம் அறிவிக்கப்படவே, வெளியிலிருந்த ஆட்களெல்லாம் அங்கு வந்து சேர்ந்தனர். சாதுவின் வேலைக்காரன் அவரது உடலை வெளியிலெடுத்தான். நானும் ரஞ்சித் ஸிங்கும் அவ்வறையில் நுழைந்து அவவுடலைத் தொட்டுப்பார்த்தோம். பல நாட்களுக்கு முன் புதைக்கப்பட்ட பிணத்தைப் போலவே அது இருந்தது. கால்களும் கைகளும் அசைவற்றிருந்தன. தலை பிணத்தின் தலைபோலச் சாய்ந்திருந்தது. அங்கிருந்த டாக்டரை அவ்வுடலைப் பரிசோதிக்கும்படி கேட்டேன். உயிருணர்ச்சியில்லையெனக் கூறினர். இருதயத் துடிப்பு அடங்கியிருந்தது. கண்களெல்லாம் அசையாதிருந்தன. ஆனால் தலையின் உச்சியில் மட்டும் சூடு இருப்பதாகத் தோன்றிற்று.

'அப்பால்' சாதுவின் வேலையாள் அவரது உடலை வெந்நீர் குளிப்பாட்டினான். கால்களையும் கைகளையும் நிமிர்த்தான். சூடான ஒரு ரொட்டியை அவர் தலையின் உச்சியில் வைத்தான். பின்னர் அவர் மூக்கிலும் காதுகளிலுமிருந்த பஞ்சையும் மெழுகையும் வெளியிலெடுத்தான். மிகப் பிரயத்தனப்பட்டுக் கூரிய கத்தியால் அவர் வாயைத் திறந்து, நாக்கை ஈர்த்துவிட்டான். அப்பால், அவரது கண்ணிமைகளில் நெய்யைத் தடவி அவற்றையுந் திறந்தான். ஆனால் கண்கள் அசையவில்லை. தலையுச்சியில் மூன்று தடவை சூடான ரொட்டிகள் வைக்கப்பெற்றன. மூன்றாவது தடவை வைக்கப்பட்டதும், சுவாசம் எழும்பிற்று. உடம்பு முழுவதும் அதிர்ச்சியுற்றது; எனினும் ரத்த ஓட்டம் மிக நுட்பமாகவேயிருந்தது. பின்னர் அவ்வேலையாள் அவரது காவில் சில நெய்த்துளிகளை விட்டான்; அவர் உள்விழுத்து விழுங்கினர்,

சில நிமிட நேரத்தில், கண்கள் இமைகொட்டலாயின. எதிரில் ரஞ்சித் ஸிங்கு உட்கார்ந்திருப்பது தெரிந்தவுடன், 'இப்பொழுது நீர் என்னை நம்புகிறீரா?' என மிக மெல்லிய குரலுடன் சாது கேட்டார். ராஜா தலையசைத்து அவர் கழுத்தில் ஓர் முத்தமாலையைப் போட்டு, காதுகளில் தங்கக் காப்புகளை அணிந்தார். பட்டாடைகள் பல கொடுக்கப்பட்டன.

"மேற்குறித்த காரியங்களெல்லாம் பெட்டி திறக்கப்பட்ட அரைமணி நேரத்தில், சாது என்னுடனும் அங்கு நின்ற பிறருடனும் விளக்கமாக, ஆனால் நோயாளியைப்போல் மெதுவாகப் பேசினர். இவ்விஷயத்தில் யாதொரு புரட்டும் ஏற்படவில்லையென்பது உறுதி." —(சுமாஸ்.)

## இலக்கம் 7.

## அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

### நீ எவ்வளவு காலத்திற்கு உயிரோடிருக்க விரும்புவாய்?

(முற்றொடர்.)

மூளை'.

ஏற்பட்ட பிணியை வியாதிக்குச் சுகமண்ட மருந்து இல்லாவிட்டாலும் அவ்வருத்தம் உண்டுபட்டவுடன் அறிந்து கொண்டால் இதைப் பெலக்கவிடாமல் தடைபண்ணும் வழிவகைகளை அல்லது மாற்றும் வழிவகைகளைப் பெரும் சித்தியுடன் செய்து கொள்ளலாம். இவ்வருத்தத்தைப் பெலக்கவிடாமல் தடைபண்ணிக் காப்பாற்றவேண்டுமானால் இது ஒருவனுக்கு உண்டுபட்டுவிட்டதோ வென்று முதன்மையே அறிந்துகொள்ளவேண்டும். ஆனால் இதை எப்படி அறிந்து கொள்ளலாம்? 40 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆளும் தங்களுடைய குடும்பவைத்தியரால் குறைந்தது வருடத்துக்கொருமுறையாவது தன்னைப் பூராய்ச் சோதிப்பித்துப்பார்க்கவேண்டுமென்ற இக்கேள்விக்கு மறுமொழியாக உலகம் முழுவதிலுமுள்ள தேச சுகாதாரம் பார்க்கும் ஒவ்வொரு இராஜ உத்தியோகஸ்தர்களும் புத்திமதி சொல்லுவார்கள். இவ்விதமான சோதனைக்குத் தகுந்தகாலம் ஒருவனுடைய பிறந்தநாட்தான் என்று குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படிச் செய்வதினால் வைத்தியர் ஏதாவது நோய்கள் உடம்பில் உண்டுபட்டிருந்தால் உடனே அறிந்து கொள்வார். அவைகளை மாற்றவேண்டிய அல்லது உக்கிரங்கொள்ளவிடாமல் தடைபண்ணும் வழிவகைகளையும் சொல்லிக் கொடுப்பார். உதாரணமாக ஒருவன், தனக்கு மாங்காயீரலில் ஏதாவது பிசகு இருக்கிறதென்று தானே அறிந்துகொள்ளமுன், தன்னுடைய சிறுநீரைச் சோதிப்பித்துப் பார்த்தால் மாங்காயீரலில் நோய் உண்டுபட்டிருக்கிறதாக அறிந்துகொள்ள முடியும். சிறு சிறு பிசகுகள் ஏதுமிருந்தால் அவைகள் இயற்கையின் உதவியால் ஒரு கெடுதியும் பண்ணமாட்டா. இயற்கை அன்னையால் தாங்கமுடியாமல் இக்குறைவுகள் பெலத்துக்கொண்டு வருமானால் அவன் அப்போது எச்சரிக்கை பண்ணுவான். ஆனால் அவைகளை அப்பருவத்தில் மாற்றிக்கொள்வது மிகவும் அரிது. கவனமுள்ள மனிதன் ஒருவன், தான் பயணம் பண்ணமுன், தன்னுடைய மோட்டோர் வண்டியின் ஒவ்வொரு பாகமும் ஒழுங்காயிருக்கிறதோ வென்று திட்டஞ் செய்து கொள்வதற்கு அதைச் செவ்வனே சோதிப்பித்துப் பார்த்துக்கொள்ளுவான். அவன் மற்றும் அநேக காரியங்களுக்குள் சில்லுகளுக்குப் போடப்பட்டிருக்கும் டயர் (Tyre) நல்லாய்க் காற்று விட்டு அடைக்கப்பட்டிருக்கின்றனவோ வென்றும், மிண்டிகள் எல்லாம் ஒழுங்காய் வேலை செய்யுமோவென்றும், யந்திரத்திற்குப் போதியளவு எண்ணெயிருக்கிறதோவென்றும், முடிவில் போதியளவு பெற்றோல் (Petrol) எண்ணெயிருக்கிறதோவென்றும் பார்த்துக்கொள்வான். இக்காரியங்களைச் செவ்வையாய்ப் பார்த்துக்கொண்டால் அவனுடைய பயணத்தில் தடைகள் நேராமலும், தாமதமில்லாமலும் கோத்திற்குப் போய்ச் சேரவும் ஏதுவாயிருக்கும். இதே விதமாக 40வயசிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தாங்கள் பிறந்தநாளிலன்றைக்குத் தங்களுடைய குடும்ப வைத்தியரால் தங்களைப் பூராய்ச் சோதிப்பித்துப் பார்த்து ஏதாவது சுகயீனங்கள் தோற்றப்பட்டிருந்தால் அதற்குச் செய்விக்க வேண்டிய மருந்துகளைச் செய்வித்துச் சாப்பிட்டு அவ்வருத்தங்களைமாற்றிக்கொண்டால் ஒரு குழப்பமுமில்லாமல் அடுத்த வருடம் பிறந்தநாள் வரும் வரைக்கும் சுகஜீவியாயிருக்க முடியும்.

ஸ்தானச் சுகாதார கர்த்தாக்கள்வசத்தில் குடும்ப வைத்தியர் ஒருவரை ஏற்படுத்தி ஒழுங்காய்ச் சோதிப்பித்துப் பார்ப்பித்துக் கொள்ள இயல்பில்லாத ஒருவரிருக்க நேரிட்டால் இப்படிப்பட்ட சோதனை முழுதும் அவருக்கு அவ்விடத்திலுள்ள சுகாதார மெடிக்கல் ஆபீசரால் (Medical Officer of Health) இலவசமாய் நடத்தப்படும்.

### விவாகஞ் செய்த மனிதர்

விவாகஞ் செய்த மனிதர்தான் விவாகஞ் செய்யாத மனிதரிலும்பார்க்க நீடித்த ஆயுசுக்கு இருக்கிறார்களென்று தேச விர்த்தாந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு முறை ஒரு தமாஷானவர் பிரமசாரி இப்படி நீடித்த ஆயுசுக்கிருப்பது விவாகஞ் செய்தவர்களுடைய நாள் எண்ணமே யொழிய வேறொன்றுமல்லவென்று ஏதிருவரை கூறினான். என்றாலும் தேச விர்த்தாந்தங்கள் விவாகஞ் செய்தவர்கள்தான் நீடித்த ஆயுசுக்கிருப்பார்களென்பதை ரூபிக்கின்றன. இந்த உண்மை தான் ஒருவேளை மேலே சொல்லப்பட்ட நோர்வே தேசத்தானை 111-ம் வயதில் விவாகஞ் செய்ய ஏவினதும் மறுபடியும் வயது இன்னும் சென்றபின் விவாகத்தில் மனம் நாடப்பண்ணினதுமாயிருக்கலாம். இவனுக்குக் கடைசியாகப் பேசப்பட்ட விவாகம் நடைபெற்றிருந்தால் இவன் எவ்வளவு வயது வரைக்கும் உயிரோடிருந்திருப்பானென்று நாங்கள் ஆச்சரியப்படக் கூடும்.

குண்டுப் பிரயோகங்கள், நஞ்சு, நஞ்சுக்கிருமிகள் முதலிய இவைகளினால் நேரும் அகால மரணங்களைத் தவிர, தன்னுடைய தேகத்தை இடைக்கிடை சோதிப்பித்து அதிலுண்டாகுங் குறைவுகளைக் கவனித்து நிவிர்த்தி பண்ணிக்கொள்ளுவதாலும், ஜென்ம வியற்கையான அங்கக்குறைவுகளொன்றுமில்லாமலிருப்பதாலும், சுகாதார முறைகளைக் கவனித்து வாசம் பண்ணிக்கொண்டு வருவதாலும் ஒருவன் விர்த்தாப்பியகாலம் வரைக்கும் உயிரோடிருக்கமுடியுமென்று சுகாதாரவிதிகளைக் கற்றறிந்தோர் இப்பொழுது துணிந்து சொல்லுகிறார்கள்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

:O:

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டமான சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 8-ம் வெயர் காசக்கடைவீதி வெத்திவேலு கனகசபை என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1927-ம் ஆடி 2-ம் ௴

| இல. | திக. | ரூ | ச | நகைவிபரம். |
|---|---|---|---|---|
| 8252 | 1 | 20 | | சப்புராது வளையல் 1 பழுது |
| 8260 | ,, | 25 | | பட்டக்காப்பு 1 கல் 1 இ. |
| 8261 | ,, | 25 | | பட்டக்காப்பு 1 கல் 2 இ. |
| 8272 | ,, | 6 | | சிறு திருகுபூ 1 |
| 8291 | ,, | 10 | 04 | சிறு சவடி முகப்புடன் மணி 4 சவுக்கமணி 12 |
| 8292 | 2 | 10 | | குவளை பவுண் 1 |
| 8318 | ,, | 18 | | மோதிரம் 1 |
| 8362 | ,, | 8 | 04 | தோடு சோடி 1 |
| 8380 | 3 | 6 | | வளையல் 4 |
| 8389 | ,, | 12 | | தங்கப்பவுண் 1 |
| 8400 | ,, | 8 | | தோடு சோடி 1 |
| 8411 | ,, | 17 | | வெ பழைய பாதசரம் சோடி 1 சுரை இல்லை |
| 8426 | 4 | 15 | | செருகுதோடு சோடி 1 சுரை இல்லை தனி. |
| 8448 | 5 | 10 | 04 | கல்மோதிரம் 1, கல் இல். புரோச 1 |
| 8504 | ,, | 6 | | கற்தோடு சோடி 1 |
| 8516 | 6 | 7 | | மோதிரம் 1 |
| 8533 | ,, | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 8554 | ,, | 20 | | மோதிரம் 1 கொப்புச்சிமிக்கிசோடி 1 வளையல் 8 சிறு பட்டகர் 1 வெ. பழைய சதங்கை சோடி 1 |
| 8561 | ,, | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 8568 | ,, | 20 | 04 | கைச்சங்கிலி 1 முகப்பு இ. |
| 8573 | ,, | 10 | 04 | ஒருகல் செருகுதோடு சோடி 1 |
| 8574 | ,, | 14 | 04 | வெ. பழையசதங்கை சோ 1 |
| 8585 | 7 | 7 | | வெ. தண்டை சோ. 1 பழு. |
| 8606 | ,, | 11 | | மோதிரம் 1 |
| 8614 | ,, | 20 | | வெ பாதசரம் சோடி 1 |
| 8676 | 9 | 9 | | தோடு சோடி 1 பழுது |
| 8684 | ,, | 7 | | வெ எண்சதங்கை சோடி 1 பழுது |
| 8687 | ,, | 6 | | சிறு கலாவரை மோதிரம் 1 வளையல் துண்டுகள் |
| 8697 | ,, | 6 | | தோடு சோடி 1 கம்பி சுரை இல்லை |
| 8710 | ,, | 10 | 04 | தங்கக்காப்பு சோடி 1 |
| 8723 | 10 | 6 | | வெ தண்டை சோடி 1 உடையல் |
| 8739 | ,, | 8 | | வெ சதங்கைசோடி 1 பழு |
| 8750 | ,, | 6 | 50 | அரைப்பவுண் 1 |
| 8769 | 11 | 6 | | பொன்தோடு சோடி 1 |
| 8774 | ,, | 6 | | வெ குழற்காப்பு சோடி 1 |
| 8788 | ,, | 12 | | தங்கப்பவுண் 1 |
| 8794 | 12 | 14 | | இமிற் காதோலை சோடி 1 சுரை 1 இல்லை |
| 8799 | ,, | 11 | | சுடர் திருகுபூ 1 சுடர் 2 இ. |
| 8843 | 13 | 13 | | தோடுசோடி 1 பழுது |
| 8860 | ,, | 50 | | பட்டக்காப்பு சோடி 1 |
| 8875 | ,, | 45 | | வெள்ளை வயிரக்கடுக்கன் சோடி 1 சிறு திருகுபூ 1 |
| 8892 | 14 | 5 | 50 | மோதிரம் 1 |
| 8897 | ,, | 10 | 04 | வெ. அடிக்குக்காப்பு சோ. 1 சுரை இல்லை |
| 8925 | ,, | 6 | | வெ அரைஞாண் 1 |
| 8939 | ,, | 11 | | திருகுபூ 1 |
| 8959 | 15 | 160 | 04 | முறிச்சுக்குத்திக்கொடி 1 |
| 8965 | ,, | 74 | | நெப்பின் காப்பு சோடி 1 முகப்பு இல்லை |
| 8972 | ,, | 10 | 04 | தங்கக்காப்பு சோடி 1 |
| 8993 | ,, | 9 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 கற்கொப்பு சோடி 1 |
| 9065 | 17 | 105 | | ஐந்து பட்டி லைமாலை 1 |
| 9073 | ,, | 6 | | வளையல் 6 காய் உடையல் |
| 9079 | 18 | 80 | | ஐந்து பட்டி லைமாலை 1 |
| 9100 | 19 | 20 | | மோதிரம் 1 கலாவரை மோதிரம் 1 |
| 9131 | ,, | 18 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 9181 | 20 | 6 | | அரைக்காப்பு சோடி 1 பொன் அரைமூடி 1 பழுது |
| 9293 | 21 | 30 | | திருகுபூ 1 வெ எண்சதங்கை சோடி 1 செருகு தோடு சோடி 1 பழுது |
| 9338 | 24 | 13 | | சவுக்கமணி 1க்கு மணி 18 |
| 9367 | ,, | 41 | | சம்பிப்பூசாணட்டியல் 1 ப |
| 9392 | 25 | 25 | | சவுக்கமணி 1க்குமணி 20 திருமணி 6 |
| 9398 | ,, | 18 | | பத பொற்சரடு 1 முத்து விழு கல்விழு |
| 9417 | 26 | 12 | | பொற்சரடு 1 பழுது |
| 9449 | 27 | 6 | 50 | கடு 2 பழுது |
| 9458 | ,, | 10 | 04 | இமிற் கலாவரைக் காதோலை சோடி 1 |
| 9470 | ,, | 45 | | தாலிக்கொடி 1 இடைகுரி சூடர் இல்லை |
| 9475 | ,, | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 9489 | 28 | 20 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 9493 | ,, | 20 | | சிறு சம்புஞ்த வளையல் சோடி 1 |
| 9502 | ,, | 25 | | சவுக்கமணி 1க்கு மணி 21 |
| 9507 | ,, | 20 | | இமிற்காதோலை சோடி 1 சுரை இல்லை |
| 9521 | ,, | 6 | | பெண் பிள்ளைக்குச்சு சோ 1 |

1927-ம் ஆடி 3-ம் ௴

| இல. | திக. | ரூ | ச | நகைவிபரம். |
|---|---|---|---|---|
| 9554 | 1 | 13 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 பொன்தோடு சோடி 1 |
| 9589 | 2 | 25 | | ஐந்து பட்டுமணி 1 |
| 9607 | ,, | 11 | | மோதிரம் 1 |
| 9634 | 3 | 15 | | பொன்தோடு சோடி 1 இமிற் விக்னுககடுக்கன் சோடி 1 |
| 9647 | 4 | 110 | | தங்க அரைஞாண் 2 கொக்கில் 1 இல்லை |
| 9662 | 5 | 6 | | செருகு தோடு சோடி 1 நசியல் |
| 9686 | ,, | 5 | 06 | இமிற்கல்பொன் மோதிரம் 1 |
| 9730 | 6 | 65 | | பொன் சிங்கமுகக்காப்பு சோடி 1 பழுது |
| 9735 | 7 | 10 | | கைவிசுக்கு 1 பழுது |
| 9747 | ,, | 9 | | பச்சைக்கல் முருகு சோ 1 சிறபின் 1 |
| 9772 | ,, | 50 | | பட்டக்காப்பு சோடி 1 நசியல் |
| 9813 | 9 | 20 | | வளையற்றகடு 8 வளையல் 8 |
| 9840 | ,, | 60 | 04 | பீலிக்காப்பு சோடி 1 சிறு சாமக்கிப்பூ 1 |
| 9902 | 11 | 50 | 04 | ஒருபட்டுச் சங்கிலிமாலை 1 |
| 9909 | ,, | 8 | | பதமணிபட்டியல் 1 பழுது |
| 9913 | 12 | 18 | | சவடி முகப்புடன் மணி 16 |
| 9916 | ,, | 10 | | கற்தோடு சோடி 1 |
| 10019 | 14 | 15 | 04 | தங்கக்காப்பு சோடி 1 |
| 10032 | 14 | 10 | 04 | செருகுதோடு சோ. 1 க இ. |
| 10062 | 15 | 6 | | இமிற்கல் மின்னி சோடி 3 |
| 10096 | 16 | 25 | | தங்கக் காப்பு 1 |
| 10111 | ,, | 6 | | சிறு திருகுபூ 1 |
| 10116 | ,, | 25 | | வெ பாதசரம் சோடி 1 ப. |
| 10124 | ,, | 10 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 10140 | 17 | 10 | | சவுக்கமணி 1க்கு மணி 27 |
| 10148 | ,, | 7 | | மோதிரம் 1 |
| 10151 | ,, | 17 | | வெ. பாதசரம் சோடி 1 சலங்கை குறைவு |
| 10197 | ,, | 11 | | சங்கக் காப்பு சோடி 1 |
| 10225 | 19 | 15 | 04 | இமிற் காதோலை சோ 1 க. இ. |
| 10244 | ,, | 11 | | சவடி முகப்புடன் மணி 21 ப. |
| 10245 | ,, | 7 | | வெ குழற்காப்புச்சோடி 1 |
| 10256 | ,, | 34 | | தங்கப்பவுண் 3 |
| 10277 | 20 | 25 | | வெ பாதசரம் சோடி 1 ப. |
| 10290 | ,, | 18 | | பீலிக்காப்பு 1 |
| 10292 | ,, | 33 | | ஒப்பின்காப்பு 1 சுரை இ. |
| 10300 | ,, | 25 | 04 | தங்கக்காப்பு சோ 1 பூசாத்திரக் கடுக்கன் சோடி 1 |
| 10309 | ,, | 40 | 04 | சிறு ஒப்பின்காப்பு சோ 1 கல் 1 இல்லை |
| 10333 | 21 | 6 | | சிறு வளையல் 8 |
| 10335 | ,, | 16 | 50 | கடு 1 |
| 10349 | ,, | 28 | | வெ பாதசரம் சோடி 1 ப. |
| 10365 | 22 | 25 | | வெ. பாதசரம் சோடி 1 ப. |
| 10389 | ,, | 8 | | ஒட்டு வளையல் 6 பூ 1 இ. கால் உடையல் |
| 10393 | 23 | 100 | 04 | ஒப்பின்காப்பு சோடி 1 |
| 10405 | ,, | 8 | | வெ எண்சதங்கை சோடி 1 |
| 10411 | ,, | 8 | 04 | வெ எண்சதங்கைசோ 1 க இ. |
| 10417 | ,, | 12 | | ஒட்டுவளையல் 6 பழுது |
| 10431 | ,, | 30 | | பொன் தோடு சோடி 1 கற்தோடு சோடி 1 |
| 10432 | ,, | 22 | | வெ பாதசம் சோடி 1 |
| 10433 | ,, | 11 | | மயிர்மாட்டி சோடி 1 |
| 10440 | 24 | 10 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 10456 | ,, | 7 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 10469 | ,, | 8 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 கற்சிமிக்கி சோடி 1 |
| 10470 | ,, | 17 | | வெ பழையபாதசரம்சோ 1 |
| 10472 | ,, | 10 | | குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 10487 | 25 | 30 | | பீலிக்காப்பு சோடி 1 ப. |
| 10511 | ,, | 10 | | மோதிரம் 4 |
| 10535 | 26 | 22 | | தவிசு சோடி 1 பழுது |
| 10582 | 28 | 6 | | வெ. குழற்காப்பு சோடி 1 சுரை இல்லை பழுது |
| 10597 | ,, | 6 | | கொப்புச்சிமிக்கி சோ 1 மூடி 1 இ. பட்டகர் 1 |
| 10599 | ,, | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 10601 | ,, | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 10619 | ,, | 18 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 10620 | ,, | 9 | | மேலீடு சோடி 1, சுறாப்பூ சோடி 1, கல் மூக்குத்தி 1 |
| 10632 | 29 | 7 | | பொன் ஒற்றைக்கல் செருகுதோடு சோடி 1 |
| 10642 | ,, | 90 | | சிங்கமுகக்காப்பு சோடி 1 |
| 10693 | 30 | 20 | | கல் மோதிரம் 1 |
| 10706 | 31 | 45 | 04 | இருசரமுடன் சங்கிலி 1 |
| 10708 | ,, | 7 | | குவளைமுத்து சோடி 1 |
| 10742 | ,, | 12 | | தங்கக் காப்பு சோடி 1 |
| 10751 | ,, | 13 | | சவுக்குமணி 1க்குமணி 22 ப. |
| 10756 | ,, | 60 | | டிம்பியுடன் எஸ்அட்டிய 1 |

விற்பனவு:—விபவ௵ ஆவணி௴ 28-ந் திகதிக்குச் சரியான 1928-ம் ஆடு செப்டெம்பர் 12௳ புதன்கிழமைகாலை 7மணிதொடக்கம் எடுபட்டகடைபிரசித்தவாக மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
வெந்தீஸ்மேன்தர்,
திரிகோணமலை.

(Mis. 1283)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.